## பன்னல பிரதேச சபை
## குருநாகல் மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பன்னல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நாட்குறிப்பின் மூலம் ரூபா 13,484,855 திரண்ட நிதியத்திற்கு வரவு மற்றும் ஏஏனைய கடன்பட்டோர் கணக்கற்கு செலவாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் உரிய பேரேட்டுக் கணக்குகளுக்கு ரூபா 534,372 குறைத்து வரவு மற்றும் செலவு வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) ஊழியர் பிணை வைப்பு ரூபா 40,286 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 கணக்கு விடயங்களுக்குரிய வருமான மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் அம்மீதிகளுக்கு இடையே ரூபா 2,506,751 ஆன இணக்கமின்மை காணப்பட்டது.

(ஆ) நிலையான சொத்துக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த 05 வாகனங்களின் கிரயப் பெறுமதி மற்றும் அவ்வாகனங்களின் சம்பவ பதிவேட்டு புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருந்த பெறுமதிக்கு ரூபா 2,486,500 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைப் பதிவேட்டின் பிரகாரம் பெறுமதி ரூபா 55,684,198 ஆன நிலுவை முத்திரைக் கட்டணங்கள நிதிக்கூற்றுக்களில் ரூபா 17,197,897 என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 108,659,356 ஆன பெறவேண்டிய கணக்குகளில் 01 ஆண்டிற்கும் 03 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 4,301,361 மற்றும் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,056,152 தொகையான நிலுவையை அறவிடுவதற்கு நடவடிகை எடுக்கப்படாதிருந்ததுடன் மொத்தம் ரூபா 61,564,923 தொகையான மீதிகளுக்குரிய காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 123,706,711 தொகையான செலுத்த வேண்டிய கணக்குகளிலிருந்து ரூபா 33,113,516 ஆன மீதிகளுக்குரிய காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் ரூபா 14,033,139 ஆன மீதியொன்று 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 29/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் சபையின் வாகனங்களில் எரிபொருள் பரிசோதனை பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 32,142,497 ஆக இருந்ததுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 106,766,382 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 9,421 | 11,220 | 12,182 | 2,587 | 8,466 | 10,035 | 10,261 | 2,934 |
| (ii) | வாடகை | 22,310 | 21,464 | 22,238 | 4,128 | 21,419 | 19,848 | 19,447 | 1,703 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 1,385 | 1,384 | 1,384 | - | 1,385 | 1,284 | 1,284 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 129,320 | 116,031 | 113,915 | 56,608 | 122,912 | 189,081 | 187,689 | 89,157 |
| | மொத்தம் | 162,436 | 150,099 | 149,719 | 63,323 | 154,182 | 220,248 | 218,681 | 93,794 |

**குறிப்பு**

மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 93 மில்லியனான நிலுவை வருமானத்திலிருந்து ரூபா 2.9 மில்லியன் வருமானம் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் பட்டியலிடல் ரூபா 150 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுகளின் நிலுவை வருமானம் ரூபா 93.7 மில்லியனுடனான ரூபா 243.7 மில்லியனில் ரூபா 149 மில்லியன் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்தது, முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 93 மில்லியனான பற்றக்குறை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 63 மில்லியனாக இருந்தது. சபையினால் வருமான நிர்வாகத்திற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதி கணக்குகளுடன் இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 2,587,054 தொகையான வீதவரி மற்றும் ஏக்கர் வரி நிலுவையிலிருந்து கூடிய அளவு முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை மீதியாக இருந்தது.

### 2.2.4 குத்தகை வாடகை

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய குத்தகை வாடகை நிலுவை ரூபா 4,128,238 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் நிலுவைக்கு ஒப்பாக 142 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம்

மாகாண பிரதான செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் முறையே ரூபா 19,001,680 மற்றும் ரூபா 17,197,897 ஆக இருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 10 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

நாளாந்தம் சேகரிக்கப்படும் 05 தொன் அளவிலான உக்கும் கழிவுப்பொருட்கள் வேறாக்கப்பட்டு உரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. உர உற்பத்திக்கு சபைக்கு சொந்தமான பெல் இயந்திரம் இல்லாமை காரணமாக பலகை பெட்டியொன்று பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரலின் 2017 வருடாந்த பாதீடு தயாரிக்கும் போது சுற்றாடல் நடவடிக்கைகளுக்காக சிறுவர் மற்றும் மகப்பேற்று சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கும் மகளிர் நிகழ்ச்சிகளுக்காக நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் வழங்கல் மற்றும் அடியிதழ்சேர் புத்தகங்கள் கையேற்றல் முறைப்படி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டாம், மூன்றாம் மற்றும் ஆரம்ப நிலை பதவிகளில் முறையே 01, 16 மற்றும் 16 வெற்றிடங்களும், சிரேஷ்ட, இரண்டாம் மற்றும் ஆரம்ப நிலை பதவிகளில் மிகைகள் 01, 20 மற்றும் 01 காணப்பட்டன. ஆரம்ப பதவிகளுக்குரிய அமைய அடிப்படையில் 08 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) இடமாற்றம் பெற்றுசென்ற, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த மற்றும் எவ்வித குறிப்பொன்றும் இல்லாமல் 16 ஊழியர்களிடமிருந்து ரூபா 56,510 மீதியொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2009 ஆம் ஆண்டின் பின்னர் நிர்மாணிக்கப்பட்ருந்த 06 கோபுரங்களிலிருந்து செயன்முறைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் உள்ள நிதி நிறுவனங்களிடமிருந்து வியாபார வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாமை

மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 02 மின் விசிறிகள் மற்றும் நீர் மோட்டார்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.2 பயனற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

சபைக்குரிய 07 சொத்து விடயங்கள் திருத்தியமைத்து பயன்படுத்தவோ அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

ரூபா 187,288 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் பற்றாக்கறை பொறுப்பு வாய்ந்தவர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.5.4 வாகனப் பயன்பாடு**

(i) 2017 சனவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய 06 வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 29/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஆலோசணைகளுக்கு முரணாக வாகன பாகங்கள் லற்றி பரீட்சிக்கப்படாமல் 02 வாகனங்களை திருத்தியமைக்கம் போது உடன்படிக்கை பெறுமதியை மிகைத்து ரூபா 280,850 ஆன மேலதிக வேலை விடயங்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.6 பெறுகை**

**3.6.1 வழங்கலும் சேவைகளும்**

பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4(ஊ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 496,235 தொகையான கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**3.6.2 ஒப்பந்த நிர்வாகம்**

ரூபா 1,953,115 உடன்படிக்கை பெறுமதி மற்றும் ரூபா 2,154,408 தொகையான முறையே குடஹெர வெல்பள்ள மற்றம் எலிவில தாமரைக் குள வீதி கற்கள் இட்டு தார் ஊற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஒக்தோபர் 19 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2018 மார்ச் வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டில் 03 மீண்டெழும் செலவின விடயங்களின் தேறிய நதிஏற்பாட்ட மிகைத்து ரூபா 3,616,254 செலவிடப்பட்டிருந்ததுடன் மூலதன செலவின விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 125,368,594 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்கு இணைக்கப்பட்டிருந்த 04 பதவியணியீனருக்கு வேறு கடமைகள் கையளிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது விநியோகிக்கப்பட்ட 04 உள்ளக கணக்காய்வு விசாரணைகளின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

**05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | சிரயான பெறுமதி இனங்காணப்பட்டு நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படாமை |
| | | (ii) | கணக்குகளில் பதிவுசெய்யும் குறைபாடுகள் காணப்பட்டமை |
| (ஆ) | சொத்துக்கள் / ஆதனங்கள் நிர்வாகம் | (i) | பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை |
| | | (ii) | விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள் காணப்பட்டமை |
| (இ) | வருமான நிருவாகம் | | நிலுவை வருமானம் அறவிடப்படாமை |
| (ஈ) | செயற்திட்டங்கள்/ ஒப்பந்த மேற்பார்வை | | போதியளவு கண்காணிப்பு இல்லாமை |